# பாடம் 24: இயேசுவின் உயிர்த்தெழுதல்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 18 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், உலகின் பாவங்களுக்காக எப்படி இயேசு தம்மையே இறுதி பலியாகச் செலுத்தினார் என்பதை நாம் கற்றோம். பாவக்கழுவாய் மற்றும் பாஸ்காவுக்குச் செலுத்தப்படும் பலியான கடவுளின் ஆட்டுக்குட்டியாக அவர் இருந்தார். இந்த பாடத்தில், அவர் இறந்து அடக்கம் செய்யப்பட்டிருந்தாலும், சாவு இயேசுவை வெற்றி கொள்ளவில்லை, ஏனெனில் அவர் கடவுள்! ஆகவே, அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. ரோமை படைவீரர்களின் கைகளில் கொடூரமாகத் துன்புற்று கொல்லப்பட்டதன் விளைவாக இறந்த இயேசு, இறந்தவர்களின் இடமான பாதாளத்திற்குள் நுழைந்தார். இந்த ‘‘பாதாளம்’’ என்பதற்கு இயேசு தாம் செய்யாதப் பாவங்களுக்காகத் தண்டிக்கப்பட்டார் என பொருளன்று, இயேசு ஒரு நேர்த்தியான மனிதராக இருந்தார், அவரில் பாவம் எதுவும் இல்லை.

2. இயேசு பாதாளத்திற்குள் நுழைந்தார் என்று சொல்வது, அவர் இறந்த ஆன்மாக்கள் உள்ள இடத்திற்குள் நுழைந்தார் என்பதாகும் (கதிம 632). இயேசுவின் உடல்சார் இறப்பு மெய்யானது என்பதே இதன் பொருள். அவர் தண்டனையால் துன்புற அங்கு சென்றார் என்பது இதன் பொருளன்று. மாறாக, இறந்தோரின் ஆன்மாக்களுக்குப் போதிக்கவும், தமது பாடுகள், இறப்பு மற்றும் வரவிருக்கும் உயிர்ப்பினால் தாம் அவர்களுக்குச் செய்தவற்றின் நற்செய்தியை அறிவிக்கவும் அவர் அங்க நுழைந்தார் (கதிம 632). அவர் இந்த இடத்திற்குள் வெற்றியை அறிவிக்கச் சென்றார்.

இறந்தோரின் இந்த இடம், இறந்துபோன நேர்மையாளர்களும் கூட கடவுளுடன் இருப்பதற்கான சாத்தியத்திற்காகக் காத்திருந்தனர், இயேசு தமது பலிக்கு முன்பாக அதைச் சாத்தியமாக ஆக்கவில்லை. ஆகவே அவர் இந்த இடத்திற்குள் சென்று கடவுளுடன் நித்திய ஒன்றிப்பில் நுழைவதற்காக அவர்களை விடுவித்தார் (633).

*கதிம 637*: ‘‘அவரது இறை ஆளோடு இணைந்திருந்த அவரது மனித ஆன்மாவில், இறந்த கிறிஸ்து இறந்தோரின் இடத்திற்கு கீழே இறங்கினார். அவருக்கு முன் சென்றோருக்காக அவர் விண்ணக வாயில்களைத் திறந்தார்.’’

3. ஆனால் இயேசு என்றென்றுமாக இறக்கவில்லை. அவரது இறப்பு மற்றும் அடக்கத்திற்குப் பிறகு மூன்றாம் நாளில், அவர் இறந்தோரிடம் இருந்து எழுந்து அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையிலிருந்து வெளியேறினார். இவ்வாறு மீண்டும் எழுதல் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது. அவர் மீண்டும் எழுந்தது ஒரு காட்சியோ அல்லது உடலற்ற ஓர் ஆவியின் தோற்றமோ அன்று. இயேசு உடலோடு உயிர்த்தெழுந்தார், மேலும் அதன் பிறகு அவர் மீண்டும் இறக்கவில்லை.

4. லூக்கா 24:1-53ஐ வாசித்து மாணவர்களுக்கு விளக்கவும்.
திருத்தூதர் பணிகள் 1:9-11ஐ வாசித்து மாணவர்களுக்கு விளக்கவும்.

5. தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இயேசு மண்ணகத்தில் நாற்பது நாட்கள் இருந்தார். நிகழ்ந்த அனைத்தும் எப்படி உண்மையில் மனிதகுலத்திற்கான கடவுளின் திட்டத்தை நிறைவு செய்தது என்பதைச் சீடர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்காக அவர் பெரும்பாலான நேரத்தை அவர்களோடு செலவிட்டார் (லூக் 24:27,45). அவரது உயிர்த்தெழுதலின் உண்மைக்கு பலரும் சாட்சியாக முடியும் என்பதற்காகவும் அவர் இந்த மண்ணகத்தில் தொடர்ந்து இருந்தார்.

மீட்டுருவாக்கி வலுவூட்டப்பட்ட அவர்களின் விசுவாசத்தோடு, இயேசுவின் பெரும் செயல்களை உலகோடு பகிர்வதன் வழியாக ‘‘சென்று மக்களினத்தார் அனைவரையும் சீடராக்குங்கள்’’ என

தமது சீடர்களுக்கு இறுதி அறிவுறுத்தல் வழங்கினார். இது மனிதர்கள் அனைவருக்கும் அவர் கொணர்ந்த எதிர்நோக்கின் தகவலாக இருந்தது (மத் 28:19).

6. தமது சீடர்களோடு 40 நாள்கள் இருந்த பிறகு, கடவுள் ஆளும் இடத்திற்கு (விண்ணகம்) திரும்பிச் சென்றார். இயேசுவின் இந்த விண்ணகத் திரும்புதல் ஆண்டவரின் விண்ணேற்றம் என்று அழைக்கப்படுகிறது. உயிர்ப்பின் 40ஆம் நாளில், வியாழக்கிழமை அன்று ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழாவைத் திருச்சபை கொண்டாடுகிறது.

*கதிம 659*: ‘‘பிறகு ஆண்டவர் இயேசு, அவர்களிடம் பேசியப் பிறகு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்தார்.’’

இறை ஆட்சியின் இடத்திற்குள் இயேசு திரும்பியதால் மட்டும் அவர் இனிமேல் மனிதரில்லை என்று பொருளன்று. அவரது உயிர்த்த உடலில், அவர் இன்னும் முழுமையான மனிதராக இருக்கிறார், ஆனால் முழுமையான கடவுளாகவும் இருக்கிறார் மேலும் தந்தை மற்றும் தூய ஆவியாரோடு இணைந்து விண்ணகத்தில் இருந்து ஆட்சி செய்கிறார்.

7. திருவழிபாட்டு ஆண்டில் நாம் சிறப்பிக்கும் எல்லா காலங்களிலும் பாஸ்கா காலம் ஏன் சிறந்தது என்பதை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் விளக்குகிறது. புனித பவுல் கூறினார், ‘‘கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால், நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற விசுவாசமும் பொருளற்றதாய் இருக்கும்’’ (1கொரி 15:14). இயேசு கிறிஸ்து உயிருடன் எழுந்ததால், நம் ஆண்டவர் இறப்பையும் எதிர்நோக்கின்மையையும் வென்றுவிட்டார் என்று பொருளாகிறது. நாம் உண்மை எதிர்நோக்கும் உண்மை எதிர்காலமும் கொண்டுள்ளோம்! நம் வாழ்வில் உள்ள எந்தப் பிரச்சனையும் எப்போதும் கடவுளுக்கு மிகப் பெரியதன்று, அவர் இறப்பை வென்று கல்லறையில் இருந்து எழுந்துவிட்டார்! இதன் காரணமாக, திருச்சபை ஒவ்வொரு உயிர்ப்பு பெருவிழாவையும் ‘‘அல்லேலூயா!’’ என்ற மறுஒலிப்புடன் கொண்டாடுகிறது.

8. இயேசுவின் உயிர்த்தெழுதல் மனிதகுல வரலாற்றில் மிக அதிசயமான நிகழ்வு மட்டுமன்று, ஆனால் காலந்தோறும் மிகப் பரபரப்பான விவாதப்பொருள்களில் ஒன்றாகவும் இருக்கிறது, சிறப்பாக இயேசுவை கடவுளின் மகன் என்று நம்பாத மக்களுக்கு

9. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாத்தியமான ஐந்து விளக்கங்கள், நம்புகின்ற மற்றும் நம்பாக மக்களால் வழங்கப்படுகின்றன:
அ) கிறிஸ்தவ விசுவாசம் கூறுவது போன்று, இயேசு உண்மையாகவே இறப்பில் இருந்து உயிர்த்தார்;
ஆ) இயேசு மெய்யாக சிலுவையில் இறக்கவில்லை; அவர் அனேகமாக மயக்கமுற்றிருந்தார்;
இ) இயேசு மெய்யாக இறந்தார், ஆனால் அவர் உயிர்த்தெழுந்தத் தோற்றத்தை ஏற்படுத்த அவரது சீடர்கள் (திருத்தூதர்கள்) அவரது உடலைக் கல்லறையில் இருந்து திருடிவிட்டனர்;
ஈ) இயேசு மெய்யாக இறந்தார், ஆனால் அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழவில்லை; அவரது தொடக்கச் சீடர்கள் ஒரு கட்டுக்கதையை உருவாக்கி, அந்தப் பொய்யைத் தங்கள் வாழ்விலும் போதனையிலும் அவர்கள் சுமந்து சென்றனர்;
உ) இயேசு மெய்யாக இறந்தார், ஆனால் அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழவில்லை; ஒருவேளை உயிர்த்த கிறிஸ்துவின் சாட்சிகள் பிறழுணர்வு பெற்றிருக்கலாம்.

மேலே சாத்தியமான ஐந்து கருதுகோள்கள் இருக்கின்றன. ஆனால் கருதுகோள் ஆ முதல் கருதுகோள் உ வரை தவறெனஎண்பித்தால், கருதுகோள் அ உண்மையானது என்றாகும்.

10. *கருதுகோள் ஆ: இயேசு மெய்யாக இறக்கவில்லை.* இயேசு மெய்யாக சிலுவையில் இறக்கவில்லை, மேலும் அவர் அனேகமாக மயக்கமுற்று உணர்வற்ற நிலைக்குச் சென்றார் என்பதற்கான விளக்கத்தை நாம் ஆய்வு செய்வோம். இது ‘‘மூர்ச்சை கருதுகோள்’’ என்றும் அறியப்படுகிறது. இந்த கருதல் உண்மையாக இருக்க, இயேசு சிலுவையில் உயிரோடுப் பிழைத்திருந்தார் என்று நாம் நம்ப வேண்டும். இது நம்புவதற்கு கடினமானது, ஏனெனில் தண்டனை நிறைவேற்றிய ரோமையர்கள் கொடூரக் கொலையாளிகள். இன்னுமதிகமாக, இந்த தண்டனை நிறைவேற்றம் பொதுவில் நிகழ்ந்தது, யூத அதிகாரிகள் அவரது இறப்புக்குச் சாட்சியாக இருந்து அவர் மெய்யாக இறந்ததை உறுதி செய்தனர்.

தண்டிக்கப்பட்ட நபரின் இறப்பைத் துரிதமாக்க ரோமை படைவீரர்கள் பயன்படுத்திய ஒரு தந்திரம், சிலுவையில் தொங்கும் நபரின் கால்களை முறிப்பதாகும். அதனால் அந்நபர் மூச்சு விடுவதற்கு தமது உடலை உயர்த்த முடியாமல், மூச்சுத்திணறலால் இறந்து போவார். ஆனால் இயேசுவின் கால்கள் முறிக்கப்படவில்லை என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது, அது அவர் ஏற்கெனவே இறந்துவிட்டார் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்ததைக் குறிக்கிறது (யோவா 19:33).

அவர் இறந்ததை உறுதிசெய்ய அவர் விலாவை அவர்கள் ஈட்டியால் துளைத்தனர். விலாவில் இருந்து குருதியும் தண்ணீரும் வடிந்தது இறப்புக்கான மருத்துவ அறிகுறி (யோவா 19:31-37). இயேசு அடைந்த துன்புறுத்தலின் விளைவாக அவர் இழந்தக் குருதியின் அளவு காரணமாக, இல்லாதக் குருதியை உடலுக்கு அனுப்ப அவரது இதயம் மிகக் கடினமாக வேலை செய்தது. இதன் விளைவாக, குருதிக்குப் பதிலாக தண்ணீர் அவரது இதயத்தைச் சூழ்ந்து திரண்டது. இந்நிலை 'இதயத்தசை வெளியேற்றம்' (பெரிக்கார்டியல் எப்யூசன்) என்று அழைக்கப்படுகிறது. இதன் காரணமாகவே அவரது விலாவில் ஈட்டி துளைத்து இதயத்தில் நுழைந்தபோது, குருதியோடு தண்ணீரும் வந்தது. இயேசுவுக்கு அவர்கள் இதைச் செய்ததைக் காணும்போது, அவர் இன்னும் உயிரோடு இருந்திருக்க முடியாது.

11. இன்னுமதிகமாக, இயேசு கடுமையாக சாட்டையால் அடிக்கப்பட்டார், சிலுவையில் அறையப்பட்டார், ஈட்டியால் குத்தப்பட்டார், துணியால் சுற்றப்பட்டு ஒரு கல்லறையில் வைக்கப்பட்டார் (யோவா 19:38-42), ஆனாலும் அவர் இறக்கவில்லை என்று சிலர் நம்புவது வியப்புக்குரியது. மேலும் தீவிர உடல் காயங்களுடன் இருந்த அவர் எப்படியோ மீண்டும் விழித்தெழுந்து, கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு, (குகை போன்ற) அவரது கல்லறை வாயிலை அடைத்திருந்த 2,000 கிலோகிராம் எடையுள்ள கல்லைப் புரட்டிவிட்டு வசந்த காலத்தின் குளிர்ந்த காலையில் வெளியே வந்தார் என்றும் நாம் நம்ப வேண்டியிருக்கிறது. கூடுதலாக, மகதலா மரியாவும் மற்றச் சீடர்களும் இந்தப் பாதி-இறந்த மனிதரை கல்லறைத் தோட்டத்தின் அருகே கண்டு, அவர் இறந்தோரிடம் இருந்து உயிர்த்தெழுந்ததாக நினைத்தனர் என்றும் நாம் நம்ப வேண்டும். பொது அறிவு நமக்கு கூறுகிறது, அப்படியிருந்தால் அவர்கள் முதலில் ஒரு மருத்துவரை அழைத்து வந்திருப்பர்!

12. "எல்லா சீடர்களும் அவரை விட்டுவிட்டு ஓடிவிட்டனர்" என்று மத்தேயு 26:56 கூறுவதால், இயேசு இறந்ததை எவலும் காணவில்லை என்று சிலர் வாதிடுகின்றனர். சீடர்கள் உடனடியாக இயேசுவை விட்டு ஓடிச்சென்றது உண்மையாக இருந்தாலும், இன்னும் தொலைவில் இருந்து சாட்சிகள் பின்தொடர்ந்தனர் என்பதை மாற்கு 14:54 உறுதி செய்கிறது, பேதுருவே அத்தகைய சாட்சிகளில் ஒருவராக இருந்தார்.

யோவான் 19:26-27ல், இயேசு சிலுவையில் தொங்கியபோது "பெயர் குறிப்பிடாத சீடரிடம்" பேசி பேறுநிறை கன்னி மரியாவை அவருடையத் தாயாகக் கொடுக்கிறார், அவ்வாறே, அவரை அவரது மகனாக ஒப்படைக்கிறார். லூக் 23:27ம் இயேசு சிலுவை சுமந்து சென்றபோது, "பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தனர், பெண்களும் அவருக்காக அழுதுப் புலம்பினர்" என்று அறிக்கை தருகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட இந்த மக்களோடு, நற்செய்திகள் மற்றச் சாட்சிகளையும் காட்டுகின்றன: யூதத் தலைவர்கள் (மத் 27:41; மாற் 15:31), ரோமை நூற்றுவர் தலைவர் (மத் 27:54; மாற் 15:39; லூக் 23:47), படைவீரர்கள் (மத் 27:35; மாற் 15:24; லூக் 23:35; யோவா 19:18,23).

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நேரில் பார்த்த சாட்சிகள் எவருமில்லை என்று கூறுவது கிடைத்துள்ள வரலாற்றுத் தரவுக்கு ஏற்புடையதன்று.

13. *கருதுகோள் இ: இயேசு மெய்யாக இறந்தார், ஆனால் அவரது உயிர்ப்பு மெய்யென்றத் தோற்றத்தை ஏற்படுத்த அவரது சீடர்கள் அவரது உடலைக் கல்லறையில் இருந்து திருடினர்.* இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்பட்டதும், அவரது உடல் திருடப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய ரோமை படைவீரர்கள் கல்லறை வாயிலைக் காவல்காத்தனர். அங்கு குறைந்தது நான்கு மனிதர்கள், அதிமாகக் கூட, நன்றாகப் பயிற்சிபெற்ற படைவீரர்கள் அங்கு இருந்தனர். இந்த வீரர்கள் கொடுமைப்படுத்துவதிலும் சண்டையிடுவதிலும் வல்லவர்கள், மீனவர்களும் வரி தண்டுவோரும் கொண்ட குழுவால் அவர்களை எளிதில் அச்சுறுத்திவிட முடியாது. அவர்கள் தூங்கியிருந்தால் அல்லது தங்கள் இடத்தை விட்டுச் சென்றிருந்தால், அவர்கள் சட்டத்தை மீறியதற்காக கொல்லப்பட்டிருக்க வேண்டும்.

இயேசுவின் கல்லறை வாயிலை மூடியிருந்த கல்லானது 2,000 கிலோகிராம் எடையுள்ளது, மேலும் அது ஏழு அல்லது எட்டு அடி உயரம் கொண்டது. அந்தக் கல்லை அகற்ற அல்லது தூக்க ஒன்றை விட அதிகமாக அல்லது இரண்டு மனிதர்கள் இருக்க வேண்டும். இயேசுவின் உடலைத் திருட எவரும் அந்த கல்லறைக்குள் நுழையாமல் இருப்பதை உறுதி செய்யும் விதமாக அது முத்திரையிடப்பட்டது. கல்லறை அமைந்த பாறைமீது இழுத்துக் கட்டப்பட்ட கயிற்றில் களிமண்ணில் பதிக்கப்பட்ட ரோமை முத்திரை இருந்தது. அந்த முத்திரையை உடைக்கும் குற்றத்தைச் செய்கிற எவரும் கொல்லப்படுவார்.

கடுங்காவல் செய்யப்பட்ட இயேசுவின் உடலிருந்த கல்லறைக்குள் நுழைவது சாத்தியமற்றது என்பதை இந்த வரலாற்று உண்மைகள் சுட்டுகின்றன. இவ்வாறு திருத்தூதர்கள் பணிகள் குறிப்பிடுவது போன்று, கிறிஸ்துவின் சிலுவையறைவு மற்றும் உயிர்த்தெழுதலின் உண்மை குறித்து திருத்தூதர்கள் உற்சாகத்துடன் போதிக்கத் தொடங்கிய பொழுது, அவர்களின் போதனை வெறும் பொய்யாக மட்டும் இருந்திருந்தால், அவர்களின் எதிரிகள் சந்தேகமின்றி இயேசுவின் உடலைக் காட்டி அவரது உயிர்த்தெழுதல் ஒரு பொய்யெனக் காட்டியிருப்பர்.

14. *கருதுகோள் ஈ: இயேசு மெய்யாக இறந்தார், ஆனால் அவரது உயிர்த்தெழுதல் குறித்து அவரது சீடர்கள் ஒரு கட்டுக்கதையை உருவாக்கினர்.* இறந்த இயேசு உயிர்த்தார் என்ற கட்டுக்கதையை அவரது சீடர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக உருவாக்கியதன் சாத்தியம் குறித்து நாம் தற்போது ஆய்வு செய்வோம். அவர்கள் அத்தகைய ஒன்றைச் செய்தார்களா? மேலும் மிக முக்கியமாக, அவர்கள் அதற்காக கொடுமைக்குள்ளாகி கொலை செய்யப்பட்ட பொழுதும் தங்களது பொய்யில் உறுதியாக இருந்தார்களா?

இயேசுவின் சீடர்கள் கோழைகளாக இருந்தனர் என்று நற்செய்திகள் நமக்குச் சொல்கின்றன. இயேசு கைது செய்யப்பட்டபோது யோவானைத் தவிர எல்லாரும் ஓடிவிட்டனர். உயிர்ப்புக்குப் பிறகும் கூட, இயேசு அவர்களுக்குத் தோன்றிய பொழுது, அதிகாரிகளுக்கு பயந்து அவர்கள் பூட்டிய அறைக்குள் ஒளிந்திருந்தனர். இவர்கள் எளிய மனிதர்களே தவிர, ஏமாற்றுகிற மற்றும் வஞ்சக எண்ணமுள்ளோர் அல்லர், உறுதியாக மிகுந்த புத்திசாலிகளும் அல்லர். அத்தகைய ஒரு கதையை புனைந்ததால் அவர்களுக்கு எந்த பயனுமில்லை, அவர்கள் அனைத்தையும் இழக்க வேண்டியிருந்தது. அவர்கள் நற்செய்தியைப் பரப்புவதற்காக தங்கள் வாழ்வைச் செலவிட்டனர், ஏழ்மையில் வாழ்ந்தனர், மேலும் இறுதியாக மறைச்சாட்சிகளாக இறந்தனர். அவர்கள் இவை எல்லாவற்றையும் ஒரு போலியான கதைக்காகச் செய்தார்களா? அவர்களது மறைச்சாட்சியம் உண்மைக்கான ஒரு சான்றளிப்பாக இருந்தது.

15. இன்னுமதிகமாக, இந்தச் சீடர்கள் பொய் உரைத்திருந்தால், எருசலேமில் இருந்த திரளான சாட்சிகள் அவர்கள் தவறானவர்கள் என்று எண்பித்திருக்க முடியும். யூதர்கள் அவர்களுக்கு எதிரானச் சான்றுகளை வழங்கியிருக்க வேண்டும், அல்லது அவர்கள் தவறிழைத்ததை மற்றவர்கள் அவர்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். மீண்டும், அவர்களின் எதிரிகள் இயேசுவின் உயிர்த்தெழுதல் பொய்யென வெளிப்படுத்த அவரது உடலைக் கொணர்ந்திருக்க வேண்டும்.

16. இயேசுவின் சிலுவையறைவு, இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவரது தொடக்கச் சீடர்களின் வாழ்வு மாறியிருந்த விதத்தை நம்மில் மறைநூலையும் வரலாற்று ஆவணங்களையும் நன்றாக வாசித்தவர்கள் அறிந்திருக்க முடியும். அவர்களில் இருந்த மிக ஆழ்ந்த மாற்றத்தால், அவர்களின் தண்டனைத் தீர்ப்புகளில் இருந்து வலிமையான தொடக்கத் திருச்சபை எழுந்தது. உண்மையில் இறந்து கல்லறையில் இருந்து உயிர்த்தெழாத மனிதரை அல்லது தமது கல்லறை அருகில் பாதி இறந்தவராகத் தள்ளாடிக் காணப்பட்ட மனிதரைக் குறித்த ஒரு பொய் மக்களின் வாழ்வை மாற்றாது.

17. கருதுகோள் உ: இயேசு மெய்யாக இறந்தார், ஆனால் அவரது சீடர்கள் பிறழுணர்வு பெற்றதாலே அவர் மீண்டும் உயிர்த்தெழுந்ததாக நினைத்தனர். பிறழுணர்வு என்பது ஒருவரின் கற்பனையில் மட்டுமே வருகின்ற ஒரு நிகழ்வு. திருத்தூதர்களால் உயிர்த்த இயேசுவைக் கண்டதாகக் கற்பனை செய்ய முடியும், ஆனால் அது ஒரு கற்பனை மட்டுமே என்பது இதன் பொருள்.

இந்த சாத்தியத்தில் உள்ளப் பிரச்சனை யாதெனில் ஏராளமான சாட்சிகள் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கண்டனர். பிறழுணர்வுகள் தனிப்பட்ட, தனிநபரின், மற்றும் உள்ளுணர்வு சார்ந்தவையாக இருக்கின்றன. ஆனால் இயேசு மகதலா மரியாவுக்கும், (முதலில் தோமா

தவிர்த்த) சீடர்களுக்கும், சற்றுப் பின்னர் (தோமா உட்பட) அனைத்து சீடர்களுக்கும், இரு எம்மாவு சீடர்களுக்கும், கடற்கரையில் மீனவர்களுக்கும், (தம் சகோதரர் அல்லது உறவினர்) யாக்கோபுக்கும், மேலும் ஒரே நேரத்தில் ஐந்நூறு பேருக்கும் தோன்றினார் (1கொரி 15:3-8). அந்த ஐந்நூறு பேரில் பெரும்பாலானோர் இன்னும் உயிரோடு இருப்பதாகவும் 1 கொரிந்தியர் 15:6ல் பதிவு செய்துள்ள புனித பவுல், எந்த வாசகரும் இந்த நேரடி சாட்சிகளைக் கேள்வி கேட்டு இக்கதையின் உண்மையைச் சரிபார்க்க அழைப்பு விடுக்கிறார். ஐந்நூறு பேர் ஒரே நேரத்திலும் இடத்திலும் ஒன்றிணைந்து கிறிஸ்துவைக் கண்டனர். அதே இயேசுவை வேறுபட்ட நேரங்கள் மற்றும் இடங்களில் தனிப்பட்ட ''பிறழுணர்வுகளில்'' காண்பதை விடவும் மிகக் குறிப்பிடத்தக்கது.

பிறழுணர்வுகள் வழக்கமாக சில நொடிகள் அல்லது நிமிடங்களே நீடிக்கும்; அரிதாக சில மணி நேரங்கள். ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு நேரடி சாட்சிகள் முன்பு நாற்பது நாட்கள் தோன்றினார் (திப 1:3). பிறழுணர்வுகள் மனநோயாளரைத் தவிர, மற்றவர்களுக்கு வழக்கமாக ஒரே ஒருமுறை மட்டுமே நிகழும். ஆனால் உயிர்த்தெழுந்த கிறிஸ்து பல தடவை சாதாரண மனிதர்களுக்குத் திரும்பவும் தோன்றினார் (யோவா 20:19 - 21:14; திப 1:3).

பிறழுணர்வுகள் உணவு உண்பதில்லை. ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு குறைந்தது இரு தருணங்களிலாவது அவ்வாறு செய்தார் (லூக் 24:42-43; யோவா 21:1-14). சீடர்கள் அவரது உயிர்த்தெழுதலை எதிர்பார்க்கவில்லை என்பது மட்டுமன்று; அவர்கள் முதலில் அதை நம்பவுமில்லை. பேதுரு, பெண்கள், மற்றும் தோமா, மற்றச் சீடர்களும் கூட இதில் அடங்குவர். அவர் தோன்றியபோது, அவர்கள் அவரை ஒரு பேயாக எண்ணினர்; ஆனால் அவர் ஒரு பேய் இல்லை என்பதை எண்பிக்க ஏதோவென்றை அவர்கள் முன்பாக உண்ண வேண்டியிருந்தது (லூக் 24:36-43).

பிறழுணர்வுகள் அதை அனுவிப்போர் தீவிர மனநிலை பாதிப்புள்ளோராக இருந்தாலன்றி, அவர்களுடன் ஆழ்ந்த, விரிவான உரையாடல்களை கொண்டிருப்பதில்லை. ஆனால் உயிர்த்த இயேசு ஒரே நேரத்தில் பதினொரு பேருடன் நாற்பது நாட்களுக்கு உரையாடினார் (திப 1:3). சீடர்கள் அவரைத் தொடவும் செய்தனர் (மத் 28:9; லூக் 24:39; யோவா 20:27). அவர்கள் அவரோடு பேசினர், அவரும் திரும்பப் பேசினார். அவர்கள் உண்மையில் பிறழுணர்வில் இருந்திருந்தால், அவர்கள் எல்லாரும் ஒரே நேரத்தில் தீவிர மனநலப் பிரச்சனையால் பாதிக்கப்பட்டிருந்திருக்க வேண்டும்.

இயேசுவின் உடல் இன்னும் கல்லறையில் இருந்திருந்தால், திருத்தூதர்கள் ''பிறழுணர்வில்'' நம்பிக்கை கொண்டிருந்திருக்க முடியாது. உயிர்த்த இயேசுவை அவர்கள் கண்டது ஒரு பிறழுணர்வாக இருந்திருந்தால், அவர்கள் இயேசுவின் உடலைத் தேடியிருக்க வேண்டும்; அது அங்கு இருந்திருந்தால் தாங்கள் கண்டதை அவர்கள் கண்டிருக்க முடியாது. இன்னுமதிகமாக, திருத்தூதர்கள் பிறழுணர்வு கொண்டு தங்களது பிறழுணர்வு கதையைப் பரப்பியிருந்தால், யூதர்கள் இயேசுவின் உடலைக் கொணர்ந்து (சீடர்கள் அதைத் திருடியிருந்தால் தவிர, அதில் கருதுகோள் இ-ல் பார்த்த கடினங்கள் உள்ளன) அதை நிறுத்தியிருப்பர். ஒரு பிறழுணர்வு உயிர்த்தெழுதலுக்குப் பிந்திய காட்சிகளை மட்டுமே விவரிக்கும்; அது காலியான கல்லறை, கல்லறைக் கல் அகற்றப்பட்டது, அல்லது உடலைக் கொணர இயலாநிலை ஆகியவற்றை விவரிக்க முடியாது.

18. மேற்கண்ட விவாதங்களின் ஒளியில், கருதுகோள் ஆ முதல் உ வரை சரியானவையாக இருக்க சாத்தியமில்லை. ஏரணம் நமக்கு கூறுவதாவது, இயேசு கிறிஸ்து, நமது ஆண்டவர், உண்மையாக இறந்தார் மேலும் இறந்தோரிடம் இருந்து உண்மையாக உயிர்த்தெழுந்தார்.